இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 05-03-2025

# ஆளுநர் ரவிக்கு அண்ணாமலை பதில்!

இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது குறித்து - இலங்கைக் கடற்படைக்கு கண்டனம் தெரிவிக்கத் தெரியாத ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு - பா.ஜ.க. அண்ணாமலையே பதில் சொல்லி விட்டார்.

**இலங்கை அரசையோ கடற்படையையோ கட்டுப்படுத்தவோ, விமர்சிக்கவோ தைரியம் இல்லாத ஆளுநர் ரவி, கச்சத்தீவு விவகாரத்தைச் சொல்லி ஒன்றிய பா.ஜ.க. அரசைக் காப்பாற்ற முயற்சித்திருக்கிறார்.**

சமூக வலைதளத்தில் ஆளுநரால் வெளியிடப்பட்டுள்ள பதிவில், “ராமேஸ்வரத்துக்கு இன்று (02.03.2025) நான் சென்றிருந்தபோது, துன்பத்தில் உழலும் நமது மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளைச் சந்தித்தேன். அவர்களின் நிலை மீது நான் ஆழ்ந்த இரக்கம் கொள்கிறேன். நமது மீனவர்களின் வாழ்வாதார கவலைகளுக்கு காரணம் கடந்த 1974ஆம் ஆண்டு அநியாயமான ஒப்பந்தம்தான். கச்சத்தீவு சுற்று வட்டார கடல் பகுதியில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பறித்ததன் மூலம் மத்தியிலும் தமிழ்நாட்டிலும் அப்போது ஆட்சியில் இருந்த அரசுகள் பெரும் பாவத்தை இழைத்தன. அன்றிலிருந்து இன்று வரை நமது மீனவச் சமூகம் தொடர்ந்து இன்னல்களை அனுபவித்து வருகிறது.

இலங்கை அரசால் அவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இந்த நீடித்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வேண்டும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும். இந்தப் பிரச்சினையை அரசியலாக்குவதற்குப் பதிலாகவும், மத்திய அரசைக் குறை கூறுவதற்குப் பதிலாகவும், ஆக்கபூர்வமான அணுகுமுறையை மாநில அரசு மேற்கொண்டால் அது பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு பெரிதும் உதவும். எல்லாவற்றுக்கும் மேலாக, 1974இல் நடந்த தவறுக்கு சம பொறுப்பு, அன்றைய மத்திய ஆட்சி கூட்டணியில் இருந்த இன்று மாநிலத்தை ஆளும் கட்சிக்கும் உள்ளது” எனக் குறிப்பிட்டார்.

அதாவது இன்றைய பிரச்சினைக்கான காரணம் என்ன என்று சொல்வதற்கும், அதற்குத் தீர்வு காண்பதற்கும் முயற்சிக்காமல் காங்கிரஸ் கட்சியையும் - தி.மு.க.வையும் குறை சொல்வதிலேயே குறியாக இருக்கிறார் ஆளுநர்.

ஆனால் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை வெளியிட்ட அறிக்கையில், ஆளுநருக்கு பதில் சொல்லப்பட்டுள்ளது. **“இலங்கையில் புதிய அதிபர் வந்த பிறகு கைதுகள் அதிகரித்துள்ளது. மீனவப் பிரச்சினையை சட்டம் ஒழுங்காகவோ, எல்லை பிரச்சினையாகவோ அணுகாமல் மனிதாபிமான பிரச்சினையாக அணுக வேண்டும், என்றே இந்திய அரசு இலங்கை அரசிடம் வலியுறுத்தி வருகிறது. மீனவர் பிரச்சினை தொடர்பாக நான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்திற்கு, அவர் எழுதிய பதில் கடிதத்தில் இந்தியா - இலங்கை கூட்டு பணிக்குழு விரைவில் நடைபெறும், என அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்”** என்று சொல்லி இருக்கிறார் அண்ணாமலை.

இலங்கை அரசுதான் மீனவர்களை கைது செய்கிறது, இந்திய - இலங்கை பேச்சை தொடங்க வேண்டும் என்று அண்ணாமலையே சொல்லி இருக்கிறார்.

இப்போதைய மீனவர் பிரச்சினை என்பது கச்சத்தீவு பகுதியில் மீன் பிடிக்கச் சென்றார்கள், செல்கிறார்கள் என்பது அல்ல. இந்திய எல்லைக் கடலுக்குள் போனாலே அவர்களுக்கு இலங்கைக் கடற்படையால் தொல்லைகள் ஏற்படுகின்றன. அதுதான் உண்மை. மொத்தத்தில் இந்திய மீனவர்களை கடலுக்குள் வரவிடாமல் விரட்டுகிறார்கள். இதனை யார் தடுக்க வேண்டும்? ஒன்றிய அரசுதானே தடுக்க வேண்டும்? இலங்கை அரசோடு அவர்கள்தானே பேச்சுவார்த்தை நடத்தி மீன் பிடி உரிமையைப் பெற்றுத் தர வேண்டும்.

இந்தியா - இலங்கை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாக வேண்டும். அது தான் நிரந்தரத் தீர்வாக அமைய வேண்டும். தமிழ்நாட்டு ஆளுநராக இருக்கிற ரவிக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்து அந்தப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**‘பா.ஜ.க. அரசு அமைந்தால் ஒரு மீனவன் கூட தாக்கப்பட மாட்டான்’** என்று சொன்னவர் நரேந்திர மோடி. அவரது பத்தாண்டு கால ஆட்சியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்வதும் விடுவிக்கப்படுவதும் தொடர் கதையாக இருக்கிறது.

**‘இலங்கை நாட்டால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு பிரச்சினை. பாகிஸ்தான் நாட்டால் குஜராத் மீனவர்களுக்கு பிரச்சினை. இரு மாநில மீனவர்களும் இது தொடர்பாக ஆலோசித்து முடிவெடுத்து செயல்படுவார்கள்’** என்று 2014 தேர்தலுக்கு முன்னதாக ராமநாதபுரத்தில் மோடி பேசினார். பத்தாண்டு காலத்தில் இப்படி ஒரு பேச்சுவார்த்தை நடந்ததா?

**“2016 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை மீனவர் இடையே அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. ஒவ்வொரு மூன்று மாதத்துக்கு ஒருமுறை மீனவர்கள் சந்திப்பது என்றும், ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒரு முறை இருநாட்டு அமைச்சர்கள் சந்தித்து பேசுவது என்றும் முடிவெடுக்கப் பட்டது. இருநாட்டு கடற்படை அதிகாரிகளும் இதில் இடம் பெறுவார்கள் என்று சொல்லப்பட்டது. இந்தக் குழுவின் முதல் கூட்டம் 2017 ஜனவரி 2 ஆம் நாள் கொழும்புவில் நடைபெற்றது. மீனவர்கள் மீது எந்த வன்முறையும் செலுத்தக் கூடாது, உயிர் இழப்புகள் ஏற்படக் கூடாது என்று இக்கூட்டத்தில் மீனவர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை இலங்கை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது. ஆனாலும் இலங்கைக் கடற்படையால் அடக்குமுறை தொடர்ந்தே வருகிறது. ஏன் இந்த பேச்சுவார்த்தை தொடரவில்லை?”** என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். இதற்கு ஆளுநர் பதில் என்ன?

கச்சத்தீவு பற்றி இவ்வளவு அக்கறையோடு பேசும் ஆளுநர் ரவி, **‘பத்தாண்டு காலத்தில் கச்சத்தீவை மீட்க பா.ஜ.க. அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?’** என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்?!



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (03.03.2025), நாகப்பட்டினம் ‘தளபதி அறிவாலய’த்தில் நடைபெற்ற ‘நாகப்பட்டினம் மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு’ நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

### தொகுதி மறுசீரமைப்பு: சென்னை தலைமைச் செயலகத்தில்

# அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டம்!

## இன்று நடைபெறுகிறது

**சென்னை, மார்ச் 5 -**

**தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை 39லிருந்து 31ஆக குறைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டு வருகிறது.**

**இதுகுறித்து விவாதித்து முடிவெடுத்திட முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப் பின்படி அனைத்துக் கட்சித் தலைவர் கூட்டம் இன்று காலை, சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறுகிறது.**

**இக்கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கு மாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.**



நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் சென்னையில் இன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது. தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட, அனைத்துக் கட்சியினரும் பங்கேற்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

மக்கள்தொகை அடிப்படையில், நாடாளுமன்ற மக்களவை தொகுதி மறுவரையறையை செயல்படுத்த ஒன்றிய அரசு முனைப்பு காட்டி வருகிறது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையால், தமிழ்நாட்டில் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை 39ல் இருந்து 31ஆகக் குறையும் அபாயம் உள்ளதால், இதற்கு தமிழ்நாடு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், கடந்த 26ஆம் தேதி அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்களவை தொகுதிகள் மறுசீரமைப்பு பிரச்சினை தொடர்பாக வருகிற 5ஆம் தேதி அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டம் நடைபெறும் என்று அறிவித்ததோடு அனைத்துக் கட்சித் தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமாறு அன்றே கடிதம் எழுதி அழைப்பு விடுத்தார்.

மேலும், நேற்று முன்தினம் நாகையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் இல்ல மணவிழாவில் கலந்து கொண்டு, மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில், அரசு கூட்டியுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அழைப்பு பெற்றவர்கள் அவசியம் பங்கேற்றிட வேண்டுமாய் வேண்டுகோள் விடுத்தார்.

அதன்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று காலையில், அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெறுகிறது. தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட அனைத்துக் கட்சியினரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்நாடு மாணவர்கள் மீது ஒன்றிய அரசுக்கு அக்கறை இருந்தால்

# உபதேசம் செய்யாமல் ரூ.2,152 கோடியை விடுவிக்கலாமே!

## நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பதிவு!

சென்னை, மார்ச் 5 -

தமிழ்நாடு மாணவர்கள் மீது ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்தால், உபதேசம் செய்யாமல் மாநிலத்துக்கான 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் நிதியை விடுவிக்கலாமே என்று நாடாளுமன்றக் கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

அனைத்தையும் தனக்கு சாதகமாக்கி கொள்ள பா.ஜ.க., ஒவ்வொரு தரவுகளையும் எவ்வாறு வெளியிடும் என்பது உலகமே அறிந்த ஒன்று. தனது பிரச்சாரத்திற்கு ஏற்றவாறு புள்ளிவிவரங்களை தேர்ந்தெடுத்து, மேற்கோள் காட்டி, எண்களை திரித்து வளர்கிறது பா.ஜ.க. இவை அனைத்தும் பரகலா பிரபாகர் எழுதிய நூலில் அம்பலப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மும்மொழி கல்விக் கொள்கை தொடர்பாக ஒன்றிய அரசு நடத்தும் ஆய்வு எப்படி இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். அதனால்தான் ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையால் ஏற்படும் தாக்கம் குறித்த உண்மையை நாங்கள் வெளிப்படுத்துகிறோம். ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் தமிழ்நாட்டை பாராட்டிவிட்டு, மாநிலத்துக்கான எந்த நிதியையும் விடுவிக்காமல் இருப்பது எந்தவகையில் நியாயம் என்று அவர் வினவியுள்ளார்.

தமிழ்நாட்டில் கல்வித்துறையில் இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும், காலை சிற்றுண்டி திட்டம் என பள்ளி மாணவ, மாணவிகளுக்காக பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், மாணவர்களின் எதிர்காலத்துக்கு நாங்கள் முதலீடு செய்கிறோம் என தெரிவித்துள்ளார். ஆனால் பா.ஜ.க., ஆளும் மாநிலங்களில் கல்வி கற்பதற்கு பல்வேறு இடர்கள் இருப்பதாக அவர் சாடியுள்ளார்.



தமிழ்நாட்டு மாணவர்கள் மீது உண்மையான அக்கறை இருந்தால், வீண் உபதேசங்களை நிறுத்திவிட்டு, மாநிலத்துக்கான 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் கல்வி நிதியை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், இதனை ஒன்றிய அரசிடம் அண்ணாமலை எடுத்து கூற வேண்டும். கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஜெர்மன் உள்ளிட்ட வெளிநாட்டு மொழிகள் பயிற்றுவிக்கப்படுவது நிறுத்தப் பட்டு, இந்தியும், சமஸ்கிருதமும் திணிக்கப்படுவதாக கனிமொழி கருணாநிதி அவர்கள் குற்றம்சாட்டியுள்ளார்.

மும்மொழி கொள்கையை வலியுறுத்தும் பா.ஜ.க.வால், எத்தனை கேந்திரிய வித்யாலா பள்ளிகளில் தமிழ்மொழி கற்பிக்கப் படுகிறது என்பதை தெரிவிக்க முடியுமா ? கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களே இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை என்பது பா.ஜ.க.வுக்கே தெரியும்.

பா.ஜ.க.வின் அவதூறுகள், தவறான தகவல்கள், நிதி தராமல் அநீதி இழைப்பது, இந்தித் திணிப்பு உள்ளிட்ட எதையும் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் வீடூர் அணையில் இருந்து 3200 ஏக்கர் ஆயக்கட்டு பாசனத்திற்கு வனம் மற்றும் காதி கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் க.பொன்முடி தண்ணீரை திறந்து வைத்தார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., மைலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயச்சந்திரன், மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் உள்ளனர்.